# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

# செலக்சன்

8

## தமிழ்

Padasalai

அன்பு நிலையம்
மதுரை – 625001

விலை ₹ 50.00

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# செலக்சன்

## எட்டாம் வகுப்பு

## ⑧ மூன்றாம் பருவம்

## தமிழ்

வெளியிடுபவர்
அன்பு நிலையம்
15, புதுமண்டபம், மதுரை – 625001

✆ 94430 43338
✆ 94430 46662

## பொருளடக்கம்

### தமிழ்


| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | நாடு, சமூகம் | மனப்பாடப்பகுதி * | 2 |
| 1. | | 1.1 படை வேழம் * | 4 |
| | | 1.2 விடுதலைத் திருநாள் | 7 |
| | பாருக்குள்ளே | 1.3 பாரத ரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன் | 9 |
| | நல்ல நாடு | 1.4 அறிவுசொல் ஔவையார் | 13 |
| | | 1.5 வல்லினம் மிகும் இடங்களும் மிகாஇடங்களும் | 17 |
| | | 1.6 மொழியை ஆள்வோம் | 19 |
| | | 1.7 மொழியோடு விளையாடு | 22 |
| 2. | அறம், தத்துவம், | 2.1 ஒன்றே குலம் * | 24 |
| | சிந்தனை | 2.2 மெய்ஞ்ஞான ஒளி | 26 |
| | அறத்தால் | 2.3 அயோத்திதாசர் சிந்தனைகள் | 28 |
| | வருவதே இன்பம் | 2.4 மனித யந்திரம் | 31 |
| | | 2.5 யாப்பு இலக்கணம் | 33 |
| | | 2.6 மொழியை ஆள்வோம் | 35 |
| | | 2.7 மொழியோடு விளையாடு | 38 |
| | | 2.8 திருக்குறள் * | 39 |
| 3. | மனிதம், ஆளுமை | 3.1 உயிர்க்குணங்கள் | 42 |
| | | 3.2 இளைய தோழனுக்கு | 44 |
| | குன்றென | 3.3 சட்டமேதை அம்பேத்கர் | 47 |
| | நிமிர்ந்துநில் | 3.4 பால் மனம் | 50 |
| | | 3.5 அணி இலக்கணம் | 51 |
| | | 3.6 மொழியை ஆள்வோம் | 53 |
| | | 3.7 மொழியோடு விளையாடு | 55 |
| | | * இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி | |


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## மனப்பாடப்பகுதி

### படைவேழம்

*"வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி*
*மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்*
*இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்*
*இருவர் ஒருவழி போகல் இன்றியே (2)*

*ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்*
*உடலின் நிழலினை வெருவி அஞ்சினர்*
*அருவர் வருவர் எனா இறைஞ்சினர்*
*அபயம் அபயம் எனநடுங்கியே"*

***– செயங்கொண்டார்***

### ஒன்றே குலம்

*"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்*
*நன்றே நினைமின் நமனில்லை நாணாமே*
*சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து*
*நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே*

*படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்*
*நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா*
*நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்*
*படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே"*

***– திருமூலர்***

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## திருக்குறள்

1. *கான முயல்எய்த அம்பினில் யானை*
   *பிழைத்தவேல் ஏந்தல் இனிது**
2. *நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்*
   *பண்புடை யாளர் தொடர்பு**
3. *பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்*
   *மண்புக்கு மாய்வது மன்**

**– திருவள்ளுவர்**

## இளைய தோழனுக்கு

*ஓடிவந்து கைகுலுக்க*
*ஒருவருமில்லையா ?*
*உன்னுடன் நீயே*
*கைகுலுக்குகிக் கொள் !*

*தூங்கி விழுந்தால்*
*பூமி உனக்குப்*
*படுக்கையாகிறது!*
*விழித்து நடந்தால்*
*அதுவே உனக்குப்*
*பாதையாகிறது !*

*நீ*
*விழித்தெழும் திசையே*
*பூமிக்குக் கிழக்கு !*
*உன்*
*விரல்களில் ஒளிரும்*
*சூரிய விளக்கு !*

*நட !*
*நாளைமட்டுமல்ல*
*இன்றும்*
*நம்முடையதுதான்*
*நட !**

**– மு. மேத்தா**

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இயல் ஒன்று


இயல் ஒன்று

# 1. பாருக்குள்ளே நல்ல நாடு

## கவிதைப்பேழை

## 1.1. படை வேழம்

### மனவரைபடம்




### மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. சிங்கம் ..............யில் வாழும்**

அ) மாயை ஆ) ஊழி

இ) முழை ஈ) அலை **விடை : இ) முழை**

**2. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ............**

அ) வீரம் ஆ) அச்சம்

இ) நாணம் ஈ) மகிழ்ச்சி **விடை : ஆ) அச்சம்**

**3. "வெங்கரி" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.........**

அ) வெம் + கரி ஆ) வெம்மை + கரி

இ) வெண் + கரி ஈ) வெங் + கரி **விடை : அ) வெம் + கரி**

**4. "என்றிருள்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................**

அ) என் + இருள் ஆ) எட்டு + இருள்

இ) என்ற + இருள் ஈ) என்று + இருள் **விடை:ஈ)என்று +இருள்**

**5. போல் + உடன்றன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .......**

அ) போன்றன ஆ) போலன்றன

இ) போலுடன்றன ஈ) போல்உடன்றன **விடை : இ) போலுடன்றன**

**குறுவினா.**

**1. சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர் ?**

★ சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர், சோழர் படை தம் உயிரைப் பறிக்கும் காலனோ என அஞ்சினர்.

★ தமது இறுதிக் காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி, அலைந்து குலைந்து நடுங்கினர்.

**2. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர் ?**

★ கலிங்க வீரர்கள் தம் நிழலையும் மற்றவர் நிழலையும் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி அஞ்சி ஓடினர்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**3. சோழனின் யானைப் படையைக் கண்ட வீரர்களின் செயல்கள் யாவை ?**

★ சோழனின் யானைப்படையைக் கண்ட கலிங்க வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர்.

★ ஏனையோர் புறமுதுகு காட்டி ஓடிப் பிழைத்தனர்.

---

**சிறுவினா :**

**1. சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப்படை வீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப் பரணி கூறுவன யாவை ?**

★ சோழர் படையின் தாக்குதலைக் கண்ட கலிங்கப்படை வீரர்கள் இஃது என்ன மாய வித்தையா என வியந்தனர். தம்மை எரிக்க வந்த தீயோ என அஞ்சினர்.

★ சோழர் படை தம் உயிரைப் பறிக்கும் காலனோ என அஞ்சினர் ; தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி, அலைந்து குலைந்து நடுங்கினர்.

★ அப்படி நடுங்கிய கலிங்கப்படையினர் படைக் கூட்டத்திலிருந்து விலகி ஓடினர்.

★ சிலர் கடலில் தாவிக் குதித்துத் தப்பினர்.

★ சிலர் யானைகளின் பின்னே மறைந்து கொண்டனர். எத்திசையில் செல்வது எனத் தெரியாமல், செல்வதற்கு அரிதான மலைக் குகைகளினுள்ளும் புதர்களுக்குள்ளும் தப்பி ஓடினர்.

★ கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு ஓடினர்.

★ தம் நிழலையும் மற்றவர் நிழலையும் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி அஞ்சினர். தஞ்சம் வேண்டி வணங்கினர்.

★ சோழ மன்னனின் படையிலுள்ள யானைகள் சினமுற்று இடியைப் போலப் பிளிறின :

★ அவ்வோசையைக் கேட்டு அஞ்சிய வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர் : ஏனையோர் புறமுதுகுகாட்டி ஓடிப் பிழைத்தனர்.

---

**சிந்தனை வினா :**

**1. ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானவை எவை எனக் கருதுகிறீர்கள் ?**

★ மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்

★ காடும் உடைய தரண் – திருக்குறள்

★ ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானவையாகச் சொல்லப்படுபவை, பயன்தரும் நீரும், வளம்மிக்க மண்ணும், நதிகளைப் படைக்கும் மலையும் மும்மாரி பெய்ய உதவும் நிழல்மிக அடர்ந்த காடுகளும் ஆகும்.

---

**★கூடுதல் வினாக்கள்–விடைக**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

**1. செயங்கொண்டார் பிறந்த ஊர் ............**

அ) தீபங்குடி ஆ) காரைக்குடி

இ) ஒட்டப்பிடாரம் ஈ) சின்னாளப்பட்டி

**விடை : அ) தீபங்குடி**

**2. கலிங்கத்துப் பரணியை எழுதியவர்............**

அ) ஔவையார் ஆ) சேக்கிழார்

இ) செயங்கொண்டார் ஈ) வள்ளுவர்

**விடை : இ) செயங்கொண்டார்**

---

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. முழை என்பதன் பொருள் .......... **விடை : மலைக்குகை**
2. தூறு என்பதன் பொருள் .......... **விடை : புதர்**
3. இறைஞ்சினர் என்னும் சொல்லின் பொருள் .......... **விடை : வணங்கினர்**
4. மண்டுதல் என்பது .......... **விடை : நெருங்குதல்**
5. உடன்றன என்பது .......... எனப்படும் **விடை : சினந்து எழுந்தன**

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. மறலி | – | தமிழர் |
| 2. கரி | – | காலன் |
| 3. அருவர் | – | யானை |
| 4. பிலம் | – | நழுவி ஓடுவர் |
| 5. வழிவர் | – | மலைக்குகை |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| 1. மறலி | – | காலன் |
| 2. கரி | – | யானை |
| 3. அருவர் | – | தமிழர் |
| 4. பிலம் | – | மலைக்குகை |
| 5. வழிவர் | – | நழுவி ஓடுவர் |

**குறுவினா :**

**செயங்கொண்டார் – குறிப்பு வரைக.**

★ செயங்கொண்டார் தீபங்குடி என்னும் ஊரினைச் சேர்ந்தவர்.
★ இவர் முதற்குலோத்துங்கச் சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார்.
★ இவரைப் பரணிக்கோர் செயங்கொண்டார் என்று பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் புகழ்ந்துள்ளார்.

**சிறுவினா :**

**கலிங்கத்துப் பரணி – குறிப்பு வரைக**

★ கலிங்கத்துப் பரணி தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பரணி வகையைச் சார்ந்த நூல்.
★ தமிழில் முதல் முதலில் எழுந்த பரணி இந்நூலே ஆகும்
★ இது முதலாம் குலோத்துங்கச் சோழன், அவருடைய படைத் தலைவர் கருணாகரத் தொண்டைமான் ஆகியோரின் கலிங்கப்போர் வெற்றியைப் பேசுகிறது.
★ இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி என்று ஒட்டக்கூத்தர் புகழ்ந்துள்ளார்.
★ கலிங்கத்துப்பரணி கலித்தாழிசையால் பாடப்பெற்றது: 599 தாழிசைகள் கொண்டது.
★ போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிகொண்ட வீரரைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் பரணி ஆகும்.

**கற்பவை கற்றபின்**

**1. உங்களுக்குத் தெரிந்த சிற்றிலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**


★ தமிழ் விடு தூது
★ கலிங்கத்துப் பரணி
★ ஆசாரக் கோவை
★ நந்திக் கலம்பம்
★ சதகம்
★ உழத்திப் பாட்டு
★ பதிகம்
★ மூவருலா
★ இரட்டை மணிமாலை
★ நூற்றந்தாதி
★ கையறு நிலை
★ குறத்திப் பாட்டு
★ தாண்டகம்
★ வாயுறை வாழ்த்து

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. போர்க்கருவிகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.**



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**கற்பவை கற்றபின்**

**1. பிறர் துன்பம் கண்டு வருந்தி அவர்களுக்குத் தொண்டு செய்த சான்றோர்களின் பெயர்களைத் திரட்டுக.**

★ வள்ளலார்
★ அன்னை தெரசா
★ டாக்டர். முத்துலெட்சுமி அம்மையார்.


---

**கவிதைப் பேழை**

**இயல் இரண்டு**

## 2.2. மெய்ஞ்ஞான ஒளி

**மனவரைபடம்**




---

**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மனிதர்கள் தம் ............ தீய வழியில் செல்லவிடாமல் காக்கவேண்டும்**

அ) ஐந்திணைகளை ஆ) அறுசுவைகளை
இ) நாற்றிசைகளை ஈ) ஐம்பொறிகளை **விடை : ஈ) ஐம்பொறிகளை**

**2. ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் .............**

அ) பகர்ந்தனர் ஆ) நுகர்ந்தனர்
இ) சிறந்தனர் ஈ) துறந்தனர் **விடை : அ) பகர்ந்தனர்**

**3. "ஆனந்தவெள்ளம்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.........**

அ) ஆனந்த + வெள்ளம் ஆ) ஆனந்தன் + வெள்ளம்
இ) ஆனந்தம் + வெள்ளம் ஈ) ஆனந்தர் + வெள்ளம் **விடை : இ) ஆனந்தம் + வெள்ளம்**

**4. உள் + இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........**

அ) உள்ளேயிருக்கும் ஆ) உள்ளிருக்கும்
இ) உளிருக்கும் ஈ) உளருக்கும் **விடை : ஆ) உள்ளிருக்கும்**

---

**குறுவினா.**

**1. உண்மை அறிவை உணர்ந்தோர் உள்ளத்தில் நிகழ்வது யாது ?**

★ உண்மை அறிவோர் உணர்ந்தோர் உள்ளத்தில் நிகழ்வது யாதெனில் இன்பப்பெருக்காய்க் கரைகடந்து பொங்கிடும் கடலாக இறைவன் விளங்குகிறார்.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது ?**

★ இறைவனின் திருவடிகளின் மேல் பற்றுவைக்காமல், பணத்தின் மீது ஆசை வைப்பதே மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது ஆகும்.

**சிறுவினா.**

**1. குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை ?**

★ மேலான பொருளே! தம் தீய எண்ணங்களை அடியோடு அழித்தவர்கள் மனத்துள்ளே எழுந்தருளி இருக்கும் உண்மையான அறிவு ஒளி ஆனவனே ! உன் திருவடிகளின் மேல் பற்று வைக்காமல், பணத்தின் மீது ஆசை வைத்ததால் நான் மனம் கலங்கி அலைகின்றேன்.

★ நீ உண்மை அறிவினை உணர்ந்தவர்களின் உள்ளத்துக்குள் இன்பப் பெருக்காய்க் கரைகடந்து பொங்கிடும் கடலாக விளங்குகின்றாய்.

★ மேலான பொருளே ! ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது மிகவும் அரிய செயலாகும்.

★ அப்பொறிகளின் இயல்பை உணர்ந்து நல்வழிப்படுத்தும் அறிவினை எனக்குத் தந்து அருள்செய்வாயாக.

**சிந்தனை வினா.**

**1. ஐம்பொறிகளைக் கொண்டு நாம் செய்யவேண்டிய நற்செயல்கள் யாவை ?**

கண் – நல்ல பயனுள்ள செயல்களைப் பார்த்தல்
காது– நல்ல செய்திகளைக் கேட்டல்
மூக்கு – நல்ல காற்றினைச் சுவாசித்தல்
வாய் – நல்ல தகவல்களை மொழிதல்
மெய் – நல்ல உணர்வினை வெளிப்படுத்துதல்

**கூடுதல் வினாக்கள்–விடைகள்**

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மெய்ஞ்ஞான ஒளி என்னும் பாடல் .......... என்னும் தொகுப்பில் உள்ளது.
**விடை : குணங்குடியார் பாடற்கோவை**

2. அறிவு ஒளியாக விளங்குபவன் .......... **விடை : இறைவன்**

3. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெயர் .......... **விடை : சுல்தான் அப்துல் காதர்**

4. நம்மை நல்வழிப்படுத்துவது .......... ஆகும் **விடை : அறிவு**

**பொருத்துக:**

| | | |
|---|---|---|
| 1. ஆனந்த வெள்ளம் | – | தருவாய் |
| 2. பகராய் | – | மேலான பொருள் |
| 3. பராபரம் | – | நீக்கியவர்க்கு |
| 4. அறுத்தவருக்கு | – | இன்பப்பெருக்கு |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| **1. ஆனந்த வெள்ளம்** | **–** | **இன்பப்பெருக்கு** |
| **2. பகராய்** | **–** | **தருவாய்** |
| **3. பராபரம்** | **–** | **மேலான பொருள்** |
| **4. அறுத்தவருக்கு** | **–** | **நீக்கியவர்க்கு** |

**1. பாடலில் வரும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.**

க<u>ள்ள</u>க், உ<u>ள்ளி</u>ருக்கும்
கா<u>சை</u>, ஆ<u>சை</u>

**2. பாடலில் வரும் மோனைச் சொற்களை எழுதுக.**

<u>அ</u>றிவை, <u>அ</u>றிவோருக்கு
<u>ப</u>டிப்பு, <u>ப</u>டிக்கப்

**குறுவினா.**

**1. எது அரிய செயலாகும் ?**

★ ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது அரிய செயல்களாகும்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. குணங்குடி மஸ்தான் சாகிபு – குறிப்பு வரைக.**

★ குணங்கு மஸ்தான் சாகிபுவின் இயற்பெயர் சுல்தான் அப்துல் காதர்.

★ இவர் இளம் துறவியாக வாழ்ந்தார்.

★ சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளில் தவம் இயற்றி ஞானம் பெற்றார்.

★ எக்காளக்கண்ணி, மனோன்மணிக்கண்ணி, நந்தீசுவரக்கண்ணி முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

---

**கற்பவை கற்றபின்**

**1. கண்ணி வகையில் பாடப்பட்ட வேறு பாடல்களைத் தொகுத்து எழுதுக.**

1. **தமிழ் விடு தூது – கண்ணி வகையில் பாடப்பட்ட**
   சீர்கொண்ட கூடற் சிவராச தானிபுரந்
   தேர்கொண்ட சங்கத் திருந்தோரும் – போர்கொண்ட

---

2. **பராபரக்கண்ணி – குணங்குடி மஸ்தான் பாடல்கள்**
   அண்ட புவனமென்றும்
   ஆடுதிருக் கூத்தினையான்
   கண்டு மகிழ்ந்திடவே
   காட்டாய் பராபரமே

---

3. ஆதியாய் ஆண்டவனாய்
   அஃததுவாய் நின்ற பெருஞ்
   சோதியாய் நின்மலமாய்
   சூழ்ந்தாய் பராபரமே!

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




## உரைநடை உலகம்

**இயல் மூன்று**

## 3.3. சட்டமேதை அம்பேத்கர்

**மனவரைபடம்**




**மதிப்பீடு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர்...........**

அ) இராதாகிருட்டிணன் ஆ) அம்பேத்கர்

இ) நௌரோஜி ஈ) ஜவஹர்லால் நேரு **விடை : ஆ) அம்பேத்கர்**

**2. பூனா ஒப்பந்தம் ........... மாற்ற ஏற்படுத்தப்பட்டது.**

அ) சொத்துரிமையை ஆ) பேச்சுரிமையை

இ) எழுத்துரிமையை ஈ) இரட்டை வாக்குரிமையை

**விடை : ஈ) இரட்டை வாக்குரிமையை**

**3. சமத்துவ சமுதாயம் அமைய அம்பேத்கர் ஏற்படுத்திய இயக்கம் ............**

அ) சமாஜ் சமாத சங்கம் ஆ) சமாத சமாஜ பேரவை

இ) தீண்டாமை ஒழிப்புப் பேரவை ஈ) மக்கள் நல இயக்கம் **விடை : அ) சமாஜ் சமாத சங்கம்**

**4. அம்பேத்கரின் சமூகப் பணிகளைப் பாராட்டி இந்திய அரசு ............ விருது வழங்கியது.**

அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா

இ) பத்மவிபூசன் ஈ) பத்மபூசன் **விடை : ஆ) பாரத ரத்னா**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. புத்தசமயம் தொடர்பாக அம்பேத்கர் எழுதிய நூல் ........... **விடை : புத்தரும் அவரின் தம்மமும்**
2. அம்பேத்கர் நிறுவிய அரசியல் கட்சியின் பெயர் ........... **விடை : சுதந்திரத் தொழிலாளர் கட்சி**
3. பொருளாதாரப் படிப்பிற்காக அம்பேத்கர் ........... சென்றார். **விடை : அமெரிக்கா**

**குறுவினா**

**1. அம்பேத்கார் தன் பெயரை ஏன் மாற்றினார் ?**

★ அம்பேத்கர் ஒடுக்கப்பட் பிரிவைச் சேர்ந்தவர் என்றாலும் மகாதேவ் அம்பேத்கர் என்ற ஆசிரியர் இவர் மீது அன்பும் அக்கறையும் கொண்டவராக விளங்கினார்.

இதனால் பீமாராவ் சக்பால் அம்பவாதேகர் என்னும் தன் பெயரை பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் என மாற்றிக்கொண்டார்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் மேற்கொண்ட பணிகள் இரண்டினை எழுதுக.**

1. அம்பேத்கர் "ஒடுக்கப்பட்ட பாரதம்" என்னும் இதழை 1927 ஆம் ஆண்டு துவக்கினார்.
2. 1930 ஆம் ஆண்டு நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தினை நடத்தி வெற்றி கண்டார்.

---

**3. வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ளும் முன் அம்பேத்கர் கூறியது யாது ?**

1930 ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ளும் முன், "என் மக்களுக்கு நியாயமாக என்ன கிடைக்கவேண்டுமோ, அதற்காகப் போராடுவேன் ; அதே சமயத்தில் சுயராஜ்ய கோரிக்கைகளை முழு மனத்துடன் ஆதரிப்பேன்" என்று அம்பேத்கர் கூறினார்.

---

**சிறுவினா**

**1. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை ?**

**இதழ்ப்பணி :**

★ 1947 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழு உருவாக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை 1948, பிப்ரவரி 21– இல் ஒப்படைத்தது.

★ அக்குழு அப்போது மக்களாட்சி நடைபெற்ற நாடுகள் பலவற்றிலிருந்து இந்திய நடைமுறைக்குப் பொருந்தும் சட்டக்கூறுகளை, இந்திய அரசியலமைப்பு வரைவில் சேர்த்தது.

★ அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புச்சட்டம், குடிமக்களின் உரிமைகளுக்குப் பலவைககளில் பாதுகாப்பை அளிப்பதாக அமைந்தது.

---

**2. அம்பேத்கரின் முதல் தேர்தல் வெற்றி குறித்து எழுதுக.**

★ 1935 ஆம் ஆண்டில் மாநில சுயாட்சி வழங்குவதற்கான இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

★ அதன்படி பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

★ ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரின் நலனைப் பாதுகாக்கத் தேர்தலில் போட்டியிட அம்பேத்கர் விரும்பினார்.

★ சுதந்திரத் தொழிலாளர் கட்சியைத் தொடங்கித் தேர்தலில் போட்டியிட்டார்.

★ அவர் வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சி வேட்பாளர்கள் பதினைந்து பேரும் வெற்றி பெற்றனர்.

---

**நெடுவினா**

**1. பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.**

★ ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்படவேண்டும் என்று இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் அம்பேத்கார் வலியுறுத்தினார்.

★ இதன் விளைவாக, ஒரு தொகுதியில் பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் ஒடுக்கப்பட்ட சமூக வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் அளிக்கும் இரட்டை வாக்குரிமை வழங்கப்பட்டது.

★ ஆனால், இதை ஏற்க மறுத்த காந்தியடிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

★ இதன் விளைவாக 1931 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இருபத்து நான்காம் நாள் காந்தியடிகளும் அம்பேத்கரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

★ அதன்படி ஒடுக்கப்பட்டோருக்கு தனி வாக்குரிமை என்பதற்குப் பதிலாகப் பொது வாக்கெடுப்பில் தனித் தொகுதி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.

★ இந்த ஒப்பந்தமே பூனா ஒப்பந்தம் எனப்பட்டது.

---

**சிந்தனை வினா**

**பாகுபாடில்லாத மக்கள் சமூகம் உருவாக நமது கடமைகளாக நீங்கள் கருதுவன யாவை ?**

★ சாதி என்னும் நச்சுக்கொல்லியை அழித்தல்.

★ சமத்துவத்தை உருவாக்குதல்.

★ தீண்டாமையை ஒழித்தல்.

★ கல்வி, வேலை வழங்குதல் போன்றவற்றில் இடஒதுக்கீடின்றி திறமைக்கு வழிவகுத்தல்.

---

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## கூடுதல் வினாக்கள்—விடைகள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அம்பேத்கர் பொருளாதாரத் துறையில் எழுதி நூலின் பெயர் ..............
   **விடை : இந்தியாவின் தேசியப் பங்குவீதம்**
2. அம்பேத்கர் .............. உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்தார். **விடை : எல்பின்ஸ்டன்**
3. அம்பேத்கர் 1923 ஆம் ஆண்டு எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை ..............
   **விடை : ரூபாய் பற்றிய பிரச்சனை**
4. சட்டப்படிப்பில் அம்பேத்கர் பெற்ற பட்டம் .............. **விடை : பாரிஸ்டர் பட்டம்**

---

**குறுவினா**

**1. அம்பேத்கர் எங்கு, எப்போது பிறந்தார் ?**

★ அம்பேத்கர் மராட்டிய மாநிலத்தில் உள்ள இரத்தினகிரி மாவட்டத்தில் உள்ள அம்பவாதே என்னும் சிற்றூரில் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் நாள் பிறந்தார்.

---

**2. அம்பேத்கரின் பெற்றோர் யாவர் ?**

★ இராம்ஜி சக்பால் – பீமாபாய் ஆகியோர் அம்பேத்கரின் பெற்றோர் ஆவர்.

---

**3. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை ?**

★ அம்பேத்கர் 1942 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை என்ற அமைப்பை நிறுவினார்.

★ இவ்வமைப்பின் மூல தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி மற்றும் சமுதாய உரிமைக்காகப் போராடினார்.

---

**4. அம்பேத்கரின் பொன்மொழிகளைக் கூறுக.**

★ நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று

★ முதல் தெய்வம் அறிவு

★ இரண்டாவது தெய்வம் சுயமரியாதை

★ மூன்றாவது தெய்வம் நன்னடத்தை

---

**கற்பவை கற்றபின்**

**1. சமூகச் சீர்திருத்தத்திற்கு உழைத்த பிற தலைவர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

1. தந்தை பெரியார்
2. காந்தியடிகள்
3. இரட்டைமலை சீனிவாசன்

---

**1. அம்பேத்கரின் பண்புகளாக நீங்கள் உணர்ந்தவற்றை எழுதுக.**

★ அம்பேத்கர் சமூக சீர்திருத்தவாதி

★ சட்ட மேதை

★ மிகச்சிறந்த பொருளியல் அறிஞர்

★ அரசியல் தத்துவ மேதை

★ பகுத்தறிவுச் சிந்தனையாளர்

★ சிறந்த பேச்சாளர், எழுத்தாளர்

★ தன்னலமற்ற தலைவர்

★ தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்தவர்

★ தொழிலாளர்கள், விவசாயிகள் நலனை பாதுகாக்க வந்தவர்

★ ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்

---



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

# செலக்சன்

எங்கள் வெளியீடுகள் :

3 முதல் 10
வகுப்பு வரை

தமிழ்
ஆங்கிலம்
கணக்கு ( TM & EM )
அறிவியல் ( TM & EM )
சமூக அறிவியல் ( TM & EM )

அன்பு நிலையம்
மதுரை – 625001

CONTACT:
94430 43338
94430 46662